மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 25–ம் நாள் புதன்கிழமை
அ.வ.எண். 55/24
பி.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்:ஜெபராஜ் | தேதி : 25.03.26 |
| வயது : | த/பெ : பாலையா |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

<u>25.03.26 குறுக்கு விசாரணை</u>

1.நான் 25.03.1975 ம் தேதி பிறந்தேன். பாலையா என் அப்பா, கோயில்பிள்ளை என் பெரியப்பா. தாசன் என் தாத்தா ஆவார். தாசனுக்கு 2 ஆண் பிள்ளைகள் மட்டும் தானா என்றால் பெண் பிள்ளைகள் உண்டு திருமணம் செய்து கொடுத்துவிட்டனர். தாசனுக்கு எத்தனை பெண் பிள்ளைகள் என்றால் 4 பேர். தாசனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை என் அப்பாவும், பெரியப்பாவும் பாகம் செய்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். தற்போது வரை தாசனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை என் அப்பாவும், பெரியப்பாவும் கூட்டாக அனுபவித்து வருகின்றனர் என்றால் சரியல்ல. என் அம்மா இறந்த பிறகு பாகம் பிரித்துவிட்டனர்.

2.என் அம்மா 1981ல் இறந்தார். என்னுடைய எதிர்வழக்குரையிலும், நிரூபணவாக்குமூலத்திலும் 2006ல் தான் வெள்ளசாமி குமாரர் முருகேசன், பிள்ளையன்மனை வடக்கூர் முண்டன் மனைவி இசக்கியம்மாள், ஜோசப்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.25 20:58:44 +0530

குமாரர் எட்வின் தாமஸ் ஆகியோர் முன்னிலையில் டிசம்பர் மாதம் வாய்மொழி குடும்ப ஏற்பாடு நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நபர்களை சாட்சியாக விசாரிக்கலாமா என்றால் இசக்கியம்மாளை தவிர மற்ற இரண்டு பேர் இறந்துவிட்டனர்.

3.நான் சொல்லும் 2006 ம் ஆண்டு குடும்ப ஏற்பாடு பொய்யானது என்றால் சரியல்ல. அவ்வாறு எந்த ஏற்பாடும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. கோயில்பிள்ளையின் மனைவி ஜேசுமரியாள் என்றால் சரிதான். கோயில்பிள்ளை தம்பதியினருக்கு குழந்தைகள் கிடையாது. என் அப்பா பாலையாவுக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவி பெயர் தெரியாது. முதல் மனைவி மூலம் என் அப்பாவுக்கு 2 பெண் குழந்தைகள் உண்டு என்றால் பிறந்து இறந்துவிட்டனர் என்று கேள்விப்பட்டேன்.

4.என் அப்பாவின் முதல் மனைவி பெயர் எஸ்தர் என்றால் சரிதான். அவர் அதற்கு முன்பு இந்துவாக இருந்தார். என் தாயார் பெயர் ஞானப்பூ. எஸ்தரின் சகோதர, சகோதரிகள் எங்கள் இல்ல நிகழ்ச்சிகளில் தற்போதும் கலந்துகொள்வார்கள் என்றால் சரிதான். என்னுடைய திருமணத்திற்கும் வந்துள்ளனர். பி.சா.ஆ 1 இறப்பு சான்றிதழ் நகல் எடுக்க யார் மனு கொடுத்தார் என்றால் நான் தான் கொடுத்தேன். எந்த வருடம் என்று ஞாபகம் இல்லை. நான் பிறந்ததில் இருந்து தற்போது வரை பிள்ளையன்மனையில் தான் வாழ்ந்து வருகிறேன் என்றால் சரிதான்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.25 20:58:47 +0530

5.வாதி பிள்ளையன்மனைவிக்கு பக்கத்து ஊரான நாசரேத்தில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். வா.சா.ஆ 4 இறப்பு சான்றிதழ் வாதி நீதிமன்ற வழக்கு மூலம் வாங்கிய விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் தாவா வழக்கிற்கு பிறகு தெரியும். வாதி கோயில் பிள்ளையின் இறப்பினை சாத்தான்குளம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து முறைப்படி உத்தரவு பெற்று அதன் அடிப்படையில் பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல.

6.வா.சா.ஆ 4 இறப்பு சான்றிதழ் குறித்து அது ஏற்பட்ட காலத்திலேயே எங்களுக்கு நன்கு தெரியும் என்று தற்போது வழக்கிற்காக பி.சா.ஆ 1 இறப்பு சான்றிதழை மோசடியாக உருவாக்கி தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. கோயில்பிள்ளையின் இறந்த தேதி 15.11.1981 என்பது தான் சரியானது என்றால் அது தவறு. பி.சா.ஆ1 நகல் எப்போது எடுக்கப்பட்டது என்றால் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும். வா.சா.ஆ 4 இறப்பு சான்றிதழ் பதிவு செய்யப்பட்ட பிறகு அந்த விபரம் தெரிந்து அதே வருடத்தில் பி.சா.ஆ 1 இறப்பு சான்றிதழ் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. அதற்கு முன்னரே பதிவு செய்துவிட்டோம்.

7.வா.சா.ஆ 4 இறப்பு சான்றிதழ் மோசடியானது என்று நாங்கள் வட்டாட்சியர் மற்றும் தீர்ப்பு வழங்கிய நீதிமன்றத்தில் எந்த முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். என் அம்மா இறந்தபோது எனக்கு எத்தனை வயது என்றால் 5 வயது இருக்கும். என் அண்ணன் முத்துராஜ் எனக்கு எத்தனை வயது மூத்தவர் என்றால் 6 வயது மூத்தவர். என் தம்பி கோயில்ராஜ்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.25 20:58:49 +0530

என்னை விட 4 வயது இளையவர். என் தாயார் இறந்தபிறகு என் பெரியப்பா மனைவி தான் எங்களை வளர்த்தார் என்றால் சரிதான்.

8.என் தாயார் இறக்கும்போது வாதி கோயில்பிள்ளையின் வளர்ப்பு மகளாக வளர்ந்து வந்தார் என்றால் எங்களுக்கு தெரியாது. அப்படி எந்த சான்றும் கிடையாது. 1ம் பிரதிவாதிக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 2004 ல் நடந்தது என்று நினைக்கிறேன். திருமணத்திற்கு முன்பு 1ம் பிரதிவாதி மும்பையில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு முதலில் என் மாமன் மகளை தான் பெண் பார்த்தார்கள் என்றால் தெரியாது.

9.1ம் பிரதிவாதி தற்போது என் அத்தை மகளை தான் திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். வாதியின் கணவர் தான் 1ம் பிரதிவாதிக்கு பெண் பார்த்து திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. பி.சா.ஆ 3 தீர்வை ரசீதுகள் எந்த வருடத்திற்குரியது என்றால் தெரியாது. 1ம் தபசில் சொத்திற்கான பட்டா கூட்டு பட்டா என்றால் சரிதான். அது வா.சா.ஆ 2 என்றால் ஆம். பி.சா.ஆ 6 தீர்வை ரசீதுகள் 1ம் தபசிலுக்குரியது என்றால் அது வீட்டு வரி ரசீது ஆகும்.

10.பி.சா.ஆ 6 ல் கண்ட வீட்டின் கதவு எண் என்ன என்றால் 4/127 ஆகும். பி.சா.ஆ 5 வீட்டு வரி ரசீதுகள் கதவு எண் 4/127 க்குரியது என்றால் சரிதான். ஜேசுமரியாள் பெயரில் இருந்து வீட்டு வரி விதிப்பினை எதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு பெயருக்கு மாற்றம் செய்துள்ளீர்கள் என்றால் 1ம் பிரதிவாதிதான் செய்துள்ளார். அது பற்றி அவருக்கு தான் தெரியும். அவ்வாறு வீட்டு வரி

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.25 20:58:54 +0530

ரசீதினை மாற்ற 1ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட உரிமை எதுவும் கிடையாது என்றால் சரியல்ல.

11.கதவு எண் 4/127 வீடு பிரிக்கப்படாத நிலையில் வரி விதிப்பு மாற்றம் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. ஏற்கனவே பிரிக்கப்பட்டுவிட்டது. கதவு எண்கள் 4/126, 4/127 ஆகிய இரண்டு வீடுகள் உள்ளன என்றால் சரிதான். கதவு எண் 4/127 வீட்டினை சேர்க்கவில்லை என்று எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். கதவு எண்கள் 4/126 மற்றும் 4/127 வீடுகள் சேர்ந்தார் போல் உள்ளன என்றால் சரிதான். தற்போது கதவு எண் 4/127 மட்டும் தான் உள்ளது என்றால் சரியல்ல. இரண்டு கதவு எண்களும் உள்ளன.

12.கதவு எண் 4/126 வீடு ஜேசுமரியாளுக்கு பாத்தியப்பட்டு வாதி அனுபவித்து வந்த நிலையில் நாங்கள் வாதியை அடித்து அனுப்பிவிட்டு ஆக்கிரமித்து கொண்டோம் என்றால் சரியல்ல. பி.சா.ஆ 5 முதல் 7 வரையிலான ஆவணங்கள் வாதியை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி திருமணத்திற்கு முன்பும், பின்பும் மும்பையில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் ஆம். பி.சா.ஆ 8 குடும்ப அட்டை அதிகப்படியான பொருட்கள் வாங்குவதற்காக எங்களால் மோசடியாக எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி ஒருபோதும் பிள்ளையன்மனையில் வசிக்கவில்லை என்றால் சரியல்ல.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.25 20:58:58 +0530

13.3ம் பிரதிவாதி ஒருபோதும் பிள்ளையன்மனையில் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி திருமணம் ஆகும் வரை கோயில்பிள்ளையின் வாரிசாக தான் வாழ்ந்து வந்தார் என்றும், திருமணத்திற்கு பிறகு கணவர் வீட்டிற்கு சென்று விட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. என் தாயார் இறந்தபிறகு ஜேசுமரியாளும், வாதியும் தான் எங்களை வளர்த்து வந்தார்கள் என்றால் சரியல்ல. கோயில்பிள்ளையின் வாரிசு என விளம்புகை செய்யக்கோரி இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 120/2022 வழக்கு தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

14.எனக்கு செய்திதாள் படிக்கும் பழக்கம் உண்டா என்றால் உண்டு. வாதி வாரிசு சான்று கோரிய வழக்கில் யாருக்கும் ஆட்சேபனை இருந்தால் தெரிவிக்குமாறு நாளிதழில் அறிவிப்பு செய்த விபரம் தெரிந்தும் ஆட்சேபனை செய்யாமல் இருந்துவிட்டேன் என்றால் சரியல்ல. வாதி முறைப்படி வழக்கு தாக்கல் செய்து சட்டப்படி வாரிசு என்று தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் அதனை ஆட்சேபிக்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. ராஜம்மாள் என்பவர் ஜேசுமரியாளின் சகோதரி என்றால் சரிதான்.

15.ஜேசுமரியாளுக்கு குழந்தை இல்லாததால் ராஜம்மாள் வாதியான அவரது மகளை ஜேசுமரியாளுக்கு கொடுத்து அதன்படி வாதி ஜேசுமரியாளால் வளர்க்கப்பட்டு சட்டப்படி வாரிசாக இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதியின் பள்ளி சான்றிதழ், வங்கி கணக்கு, வாதியின் திருமண உடன்படிக்கை, ஞானஸ்தான சான்றிதழ் ஆகியவற்றில் வாதியின் தந்தை பெயர் கோயில்பிள்ளை

என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது மோசடியானது ஆகும். வாதி கோயில்பிள்ளையின் வாரிசு என்பதால் தபசில் சொத்தில் வாதி கோரும் பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

16.கோயில்பிள்ளையின் வாரிசு நாங்கள் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறோம் என்றால் சரியல்ல. வாதி கேட்டுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.25 20:59:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.